1994 மே 2]

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிபந்தனைகளை நிறைவேற்றிய, உரிய கருத்துரு விரைவிலே கிடைக்கப்பெற்றால், இந்த ஆண்டிலே அதைப் பரிசீலிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க. அதிலே கம்ப்யூட்டர் சையின்ஸ் பாடப் பிரிவைத் தொடங்குவதற்கான ஏற்பாடு குறித்த கருத்துரு உரிய முறையிலே வரப்பெறும்போது அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் *475*, திருமதி கற்பகம் இளங்கோ, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

475—

காரைக்குடியில் லாரிகளை நிறுத்துவதற்குத் தனி இடம் அமைத்தல்.

**** 20106—திருமதி கற்பகம் இளங்கோ:***

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடியில் லாரிகளை நிறுத்துவதற்கெனத் தனி இடம் அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

மாண்புமிகு டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : காரைக்குடி நகர் வ.உ.சி. சாலையில் ந. அ. எண். *944*, வார்டு எண். *1* பிளாக் *10*, அரசு புறம்போக்கு கண்மாய் இடத்தில் ஒரு ஏக்கர் இடத்தை லாரிகள் நிறுத்துவதற்கான இடமாகத் தேர்வு செய்து அந்த இடத்தை உரிமை மாற்றம் செய்ய பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்ட ஆட்சித் தலைவரைக் கோரி காரைக்குடி நகராட்சி ஆணையாளர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

திருமதி கற்பகம் இளங்கோ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரைக்குடி நகரம் பல்வேறு கிராமங்களின் மையப் பகுதியாகவும், பல முக்கிய நகரங்களின் இணைப்புப் பாதையாகவும் அங்கே லாரி உரிமையாளர்களும், உபயோகதாரர்களும் அதிகமான

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

அளவிலே இருப்பதாலும், தேவகோட்டையிலிருந்து காரைக்குடி பழைய பேருந்து நிலையம்வரும் வழியில் மிக நெருக்கடியான பகுதியான அந்த மேல ஊரணி வாய்க்காலின் இரு புறங்களிலும், அதேபோல் வ.உ.சி. சாலையிலும், லாரிகளை நிறுத்தி போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருப்பதோடு மட்டுமல்லாமல், அதிகமான விபத்துக்கள் நடப்பதால், இந்தக் கருத்துருவை, அதாவது நகராட்சி உரிமை மாற்றும் திட்டத்தின் கீழ், மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ள அந்தக் கருத்துருவை, துரிதப்படுத்தி, இந்த நடப்பாண்டிலே லாரிகள் நிறுத்தத்தை ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரைக்குடி நகராட்சிப் பகுதியில் லாரிகளை நிறுத்துவதற்காக, அதற்கு ஏற்றவாறு நகராட்சியிலே இடம் எதுவும் இல்லை. அந்தக் காரணத்தினாலே, இன்றைக்கு காரைக்குடி நகரினுடைய வ.உ.சி. சாலையில் அரசு புறம்போக்கு, கண்மாய்ப் புறம்போக்கு 7 ஏக்கர் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறது. அதனுடைய பெரும்பகுதி நீர்ப்பிடிப்பு இல்லாத பகுதியாக இருக்கின்ற காரணத்தினாலே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற அந்த லாரிகள் நிறுத்துவதற்கு உண்டான ஒரு ஏக்கர் நிலத்தைத் தேர்வு செய்திருக்கிறார்கள். அதைச் சீர் செய்து, லாரிகள் நிறுத்துவதற்குப் போதுமான இடமாக மாற்றுகின்ற நிலையில், இன்றைக்கு நகராட்சியினுடைய ஆணையாளர், மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அந்தப் புறம்போக்கு நிலத்தை இட உரிமை மாற்றம் செய்வதற்காக பிரேரணைகளைச் சமர்ப்பிக்க உள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் *10-55*

திருமதி கற்பகம் இளங்கோ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லாரிகளை நிறுத்துவதற்காக காரைக்குடியிலே, புதுக்கோட்டை செல்லும் பை-பாஸ் சாலையில் ஒரு ஏக்கர் நிலம் கையகப்படுத்தி, கடந்த *25-11-1993* அன்று நகராட்சியிலிருந்து ஒரு தீர்மானம் போட்டு காரைக்குடி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அந்த நகராட்சி உரிமை மாற்றம் திட்டத்தின் வரைவு அனுப்பப்பட்டுள்ளது என்று கூறப்பட்டிருக்கிறது. அதன் தற்போதைய நிலை என்ன என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு புறம்போக்கு இடத்தை உரிமை மாற்றம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

செய்யக் கோருகின்ற அந்தத் தீர்மானத்தை மாவட்ட ஆட்சியர் சிவகெங்கை அவர்களுக்கு அனுப்புவதற்காகவும், அதிலே நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் காரைக்குடி நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு நடவடிக்கை எடுக்கச்சொல்லி, ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அந்த அடிப்படையிலே காரைக்குடி நகராட்சியினுடைய ஆணையாளர் அதற்குண்டான ஆவணங்களைத் தயார் செய்து மாவட்ட ஆட்சியரை அணுகி அதற்குப் பிறகுதான், அந்த இடம் தேர்வு செய்யப்படும். தேர்வு செய்யப்பட்டவுடன் காரைக்குடி நகரப் பகுதிக்கான லாரிகளை நிறுத்துவதற்கு உண்டான ஏற்பாடுகள் அத்தனையும் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 476, திரு. கோ. காளன், இருக்கையில் இல்லை.

வினா எண் 477, திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்.

477—

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இன மாணவர்களுக்கு சிறப்புத் தகுதிக்கான உதவித் தொகையை உயர்த்துதல்

* ***20608***—திரு. ஆ. சுப்புரத்தினம்:

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்லூரிக் கல்வித் துறையால் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இன மாணவர்களுக்குத் தரப்படும் சிறப்புத் தகுதிக்கான (Adhoc Merit) உதவித் தொகையை ரூ.300/- லிருந்து ரூ. 400/- ஆக உயர்த்தி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும்?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சனிக்கிழமையன்று அண்ணல் அம்பேத்கா்ருடைய திருவுருவச்